செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 247 நாள்: 23/4/18

## செய்தி குறிப்பு

### புதிய தொழில் முனைவோர், தொழில் நிறுவன வளர்ச்சித் திட்டம்

படித்த ஆண்/பெண் இருபாலாரையும் முதல் தலைமுறை தொழில் முனைவோராக மாற்ற "புதிய தொழில் முனைவோர், தொழில் நிறுவன வளர்ச்சித் திட்டம்" என்ற புதிய திட்டமானது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 2012-13-ம் ஆண்டு துவங்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் உற்பத்தி மற்றும் சேவை சார்ந்த நிறுவனங்களுக்கு திட்ட முதலீட்டில் 25% மானியம், அதிக பட்சமாக ரு.25 லட்சம் மானியம், மேலும் வங்கிகள் கொடுக்கும் கடனுக்கான வட்டியில் 3% பின் முனை வட்டி மானியம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் தொழில் முனைவோரின் திட்ட முதலீட்டுத் தொகை குறைந்த பட்சம் 5 லட்சத்திற்கு மேல் இருக்க வேண்டும், அதிக பட்ச தொழில் திட்ட முதலீட்டுத் தொகை வரையறை எதும் இல்லை. இத்திட்டத்தின் மூலம் கடன் பெற விரும்புவோர் முதல் தலைமுறை தொழில் முனைவோராக இருக்க வேண்டும் கல்வி தகுதி பட்டப் படிப்பு, பட்டயப் படிப்பு, தொழில் நுட்ப பயிற்சி (ஐடிஐ) / தொழில் பயிற்சி தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 21 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும். பொது பிரிவினர் வயது 35-க்குள் இருக்க வேண்டும். பெண்கள் / தாழ்த்தப்பட்ட/ பழங்குடியினர் / பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / திருநங்கையர் / மாற்றுத் திறனாளிகள் / முன்னாள் ராணுவத்தினர் வயது 45-க்குள் இருக்க வேண்டும். இத்திட்டத்தில் கடனுதவி பெறும் நபர்களுக்கு 1 மாதம் தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்படும். இத்திட்டத்தில் 50% பெண் தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே மத்திய அல்லது மாநில அரசின் கடனுதவி பெற்றவர்கள் இத்திட்டத்தின் கீழ் கடனுதவி பெற இயலாது. விண்ணப்பதாரர் தமிழ் நாட்டில் கடந்த 3ஆண்டுகளாக தொடர்ந்து வசிப்பவராக இருக்க வேண்டும். நடப்பு நிதியாண்டில் (2018 - 19), 49 நபர்களுக்கு ருபாய்.490.00 இலட்சம் கடன் ஒப்புதல் மற்றும் கடனுதவி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள்

இணையதளம் முகவரி http://www.msmeonline.tn.gov.in/ விண்ணப்பித்து அதன் நகலை இணைப்புகளோடு வேலூர் காங்கேயநல்லூர் ரோட்டில் அமைந்து உள்ள பொது மேலாளர், மாவட்ட தொழில் மைய அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

செ.ம.தொ.அ.
வேலூர்- 9.